2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. பி.டி. ஜாட்டி, இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் மற்றும் முன்னாள் தற்காலிக குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.டி. ஜாட்டி, இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் மற்றும் முன்னாள் தற்காலிக குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்.

"இந்தியத் திருநாட்டின் சுதந்திரப் போராட்ட தியாகியும், இளம் வயது முதலே பொதுவாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவரும், நலிந்த மக்களின் நலன்களுக்காக அரும்பாடுபட்டவரும், மைசூர் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும், புதுச்சேரி, ஒரிசா மாநிலங்களின் முன்னாள் ஆளுநரும், 1974 ஆம் ஆண்டு முதல் 1979 வரை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகவும், 1977 ஆம் ஆண்டில் தற்காலிக இந்தியக் குடியரசுத் தலைவராகவும் பணியாற்றிய திரு. பி.டி. ஜாட்டி அவர்கள் 7-6-2002 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

முற்பகல் 10-05

(ஆ) திரு. கிருஷ்ண காந்த், இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. கிருஷ்ண காந்த், இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்.

"இந்தியத் திருநாட்டின் முதுபெரும் தேசியவாதியும், சுதந்திரப் போராட்ட வீரரும், பேச்சாற்றல், எழுத்தாற்றல் மிக்கவரும், விஞ்ஞானியாக வாழ்க்கையைத் தொடங்கி சிறந்த முறையில் சமுதாயப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவரும், மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், ஆந்திர மாநில ஆளுநராகவும், 1996 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் 1997 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள்

வரை இம்மாநிலத்தின் தற்காலிக ஆளுநராகவும், 1997 ஆம் ஆண்டு முதல் தனது இறுதிக் காலம் வரை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகவும் சீரிய முறையில் பணியாற்றிய திரு. கிருஷ்ண காந்த் அவர்கள் 27-7-2002 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (25-10-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்தல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, அனைத்து வடிவிலான கொண்டக் கடலையைப் பொறுத்தவரையில், தருமபுரி மாவட்டத்தை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 26-3-2002 ஆம் நாளிட்ட 86ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]